# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 384 /பேரூ/2025**
**நாள் : 12.05.2026**

P.S. முனுசாமி,
ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சியின் 8வது வார்டு மன்ற உறுப்பினரும் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, எண். 36, பின்ஜலார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.S. முனுசாமி என்பவரது 12.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.11.2025 அன்று பெறப்பட்டு, 384/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சியின் 8வது வார்டு மன்ற உறுப்பினரும் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, எண். 36, பின்ஜலார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரருமான திரு. P.S. முனுசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 12.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" 1. **31.03.2025**ல் சொத்துவரி நிலுவை இல்லாமல் செய்தது A.D. அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் மாற்றுப் பணியாளர் பாலாஜி என்பவரின் பெயரில் ஊக்க தொகை பெற்று E.O. செயல் அலுவலர் அவர்கள் இந்த பணத்தை கையாடல் செய்துள்ளார்.

2. ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பெருமாள் குப்பத்தில் அடங்கிய பிரதான சாலையில் தினசரி காய்கறி சந்தை வருடத்திற்கு ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை டெண்டர் விடப்படும் நிலையில் இந்த ஆண்டு 2024 to 2025ல் குத்தகை விடாமலும், நிர்வாக தரப்பிலும் வசூல்

செய்யாமலும், யாரோ ஒரு மூன்றாம் நபரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு அரசுக்கு வரவேண்டிய மிக பெரிய வருவாய் இழப்பை செய்துள்ளார்.

3. மாதாந்திர தெருவிளக்கு, குடிநீர் உதிரிபாகங்கள், பொது சுகாதாரம் மற்றும் இதர பட்டியலில் சேவை வரி, வருமான வரி பிடித்தம் செய்யாமல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறார்கள்.

4. (1) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பஜார் தெருவில் அமைந்துள்ள காய்கறி வணிக வளாகம் கட்டிடத்தை இடிக்க டெண்டர், நவின்குமார் என்பவருக்கு ரூ.1,10,000 கையூட்டு பெற்றுக்கொண்டு ஊழல் புரிந்துள்ளார்கள்.

(2) ஆரணி பேரூராட்சிக்கு சொந்தமான காய்கறி மற்றும் வணிக வளாகம் கட்டிடத்தை பணம் கொடுத்து. இடித்து தரை மட்டம் செய்ய ஒப்பந்ததாரர்கள் இருக்கும்போது E.O. மற்றும் தலைவர் M. ராஜேஸ்வரி அவர்கள் இணைந்து அரசு பணம் 2,60,000 ரூபாய் தனி நபர் ஒருவர் மூலமாக டெண்டர் விட்டதாக தயார் செய்து அந்த நபருக்கு பணம் சேராமல் மக்கள் வரிப்பணம் கூட்டு கொள்ளையடித்துள்ளார்கள். அரசுக்கு இரண்டு வழியில் வருவாய் இழப்பீடு செய்துள்ளனர்'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி பேரூராட்சி முதல்நிலை செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரானஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 08.04.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 20.03.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 72/2026/அ1ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''ஆரணி பேரூராட்சியில் கடந்த 2022-2023, 2023-2024, 2024-2025 மற்றும் 2025-2026 ஆகிய நான்கு ஆண்டுகள் காலமாக சொத்துவரி நிலுவையின்றி 100 சதவீதம் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. 2024-2025ஆம் ஆண்டில் வசூல் பணிகளை மேற்கொள்ள வரித்தண்டலர்கள் இல்லாத நிலையில், இப்பேரூராட்சி இளநிலை உதவியாளரை கொண்டு முழு நேர வசூல் பணியும், இவ்வலுவலக பதிவறை எழுத்தர் திரு. ந. பாலாஜி என்பவர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மாற்றுப் பணியில் இருந்த போதிலும், அவ்வப்போது பணியின் அவசியம் கருதி, வசூல் பணி மேற்கொண்டு சொத்துவரி முழுவதையும் 100 சதவீதம் வசூலிக்கப்பட்டதால் இப்பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. க.கோ. யுவராஜ் என்பவருக்கும், இப்பேரூராட்சி பதிவறை எழுத்தர் திரு. என். பாலாஜி என்பவருக்கும் ஊரக வளர்ச்சித் துறை அரசாணை எண். 504, நாள் 24.06.1987ன்படி ஒரு மாத ஊதியம் ஊக்கத்தொகை, அவர்களின் வங்கி கணக்கில் ECS (இ.சி.எஸ்) வழி நேரடியாக அளிக்கப்பட்டது. இதில் எவ்வித கையாடலும் நடைபெறவில்லை. இப்புகார் ஆதாரமற்ற புகார் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி.பி. சாலையில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை சுங்கம் வசூலிக்கும் உரிமைக்கான ஏலம் 14.06.2023ல் நடைபெற்றது. அதில் அதிக ஏலம் ரூ.2,33,000/- ஏலம் கோரிய திரு. என்.

பிரசாந்த் த/பெ நயினார், 40, மண்ணடி தெரு, மல்லியங்குப்பம் என்பவருக்கு சுங்கக்கட்டணம் வசூலிக்க டேவணித் தொகையாக ரூ.50,000/- வசூலித்துக்கொண்டு அப்போது இருந்து வந்த செயல் அலுவலரால் உத்தரவு வழங்கப்பட்டு, வசூல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சந்தை அமைந்துள்ள இடமானது ஒரு பகுதி மல்லியங்குப்பம் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட இடமாக உள்ளதாலும், மேலும், நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையில் அமைந்துள்ளதாலும், மேலும் இந்த சந்தை அமைந்துள்ள இடத்தில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு எவ்வித அடிப்படை வசதியும் இல்லாத காரணத்தினாலும் வசூல் பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவே, தொடர்ந்து வசூலிக்க இயலவில்லை என குத்தகைத்தாரரால் தெரிவிக்கப்பட்டது. மல்லியங்குப்பம் ஊராட்சியினை ஆரணி பேரூராட்சியில் இணைக்கும்பட்சத்தில் தற்போது அப்பகுதியில் நடைபெறும் தினசரி சந்தைக்கான இடத்தினை மேம்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் மேற்கொண்டு தினசரி சந்தையினை வருவாயை பெருக்கும் நோக்கில் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, மல்லியங்குப்பம் ஊராட்சியினை ஆரணி பேரூராட்சியில் இணைக்கும் அரசாணை எண்.205 நாள் 31.12.2024 வெளியிடப்பட்டுள்ளது. 2026-2027ல் சந்தை மேம்பாட்டு பணிக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குத்தகைதாரரும் இறந்துவிட்டார் என்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பேரூராட்சியில் தெருவிளக்கு, குடிநீர் பராமரிப்பு மற்றும் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இப்பேரூராட்சி மன்றத்தால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு அவ்வப்போது தேவைக்கேற்ப பொருட்கள் வினியோகம் செய்ய உத்தரவு வழங்கி பொருட்கள் வாங்கப்படுகிறது. மேலும், வழங்கப்படும் பொருட்களுக்கான பட்டியல் தொகைகளுக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் பட்டியல் மேலொப்பம் பெற்று பட்டியல் தொகை ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. பட்டியல் தொகைகளுக்கான வருமான வரி மற்றும் சேவை வரிகளை (Income Tax and GST Tax) பொருட்களை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர்களே அவர்களின் கணக்கில் செலுத்தி விடுவதால் பிடித்தம் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இதர ஒப்பந்ததாரர்களின் பணி பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை 2023-2024ஆம் ஆண்டுக்கு ரூ.1,76,504/-, 2024-2025ஆம் ஆண்டுக்கு ரூ.9,55,934/- மற்றும் 2025-2026ஆம் ஆண்டுக்கு ரூ.18,49,163/-ஆக மொத்தத் தொகை ரூ.29,81,601/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண். 973522, நாள் 30.03.2026ன் மூலம் செலுத்தப்பட்டுள்ளது என்ற தகவலும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பஜார் தெருவில் பழுதடைந்துள்ள பழைய வணிக வளாக கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டு புதியதாக 20242025ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2024-2025ஆம் ஆண்டு ரூ.206.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நாளங்காடி காய்கறி, மீன், இறைச்சி கடைகள் கட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 05.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதால் பழைய கட்டிடத்தை இடித்து அகற்ற பொறியாளர்களால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர்கள் கலந்துக்கொண்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, கட்டிடம் இடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இதற்கு இளநிலை பொறியாளரால் அளவுகள் எடுக்கப்பட்டு, உதவி செயற்பொறியாளர் அவர்களால் மேலளவுகள் எடுக்கப்பட்டு அளவுப் புத்தகத்தின்படி பட்டியல் தொகை அளிக்கப்பட்டது. இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை. தற்போது முழுவதுமாக ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 04.03.2026 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் திரு. P.S. முனுசாமி என்பவர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

“திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் கீழ்க்காணும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

(1) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பஜார் தெருவில் அமைந்துள்ள காய்கறி வணிக கட்டடத்தை இடிப்பதற்கு பேரூராட்சியில் ஒப்பந்ததாரர்கள் இருக்கும் நிலையில், ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராஜேஸ்வரி என்பவரின் கணவர் திரு. நவின்குமார் என்பவர் தனி நபரிடம் ரூ.1.10 இலட்சம் தொகை கையூட்டு பெற்று கட்டடம் இடிக்கும் பணி முறைகேடாக நடைபெற்றுள்ளது.

(2) பெருமாள் குப்பத்திலுள்ள தினசரி காய்கறி சந்தையினை குத்தகை விடப்படுவதன் மூலம் ஆண்டிற்கு ரூ.4 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை பேரூராட்சிக்கு வருவாய் வரும் நிலையில் 2024-25ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடாமலும், நிர்வாக தரப்பிலும் வசூல் செய்யாமலும் ஒரு மூன்றாம் நபரிடம் பேரூராட்சி மன்றத் தலைவரின் கணவர் கையூட்டு பெற்று, பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

(3) பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணம் பட்டுவாடா இனங்களில் சேவை வரி, வருமான வரி பிடித்தம் செய்யப்படுவதில்லை. இதனால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

(4) ஆரணி பேரூராட்சியில் 31.03.2025 அன்றைய தேதியில் சொத்துவரி நிலுவையில் இல்லாமல் செய்து A.D. அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு. பாலாஜி என்பவரின் பெயரில் ஊக்கத் தொகை பெற்று பேரூராட்சி செயல் அலுவலரால் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் முறைகேடுகளுக்கு காரணமான ஆரணி பேரூராட்சி மன்ற தலைவர் மீதும் மற்றும் அவருக்கு உடந்தையாக இருக்கும் பேரூராட்சி செயல் அலுவலர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்’’ என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

(1) பஜார் தெருவில் 2024-2025ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் புதிய நாளங்கடி காய்கறி, இறைச்சி கடைகள் கட்ட, ஏற்கனவே இருந்த பழைய வணிக கட்டடத்தை இடிக்கும் பணிக்கு அரசு வழிகாட்டுதலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டும் மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டும் இளநிலை பொறியாளரால் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அளவு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டு உரிய ஒப்பந்ததாரருக்கு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது முழுவதுமாக ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு 04.03.2026 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(2) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பி.பி. மாநில நெடுஞ்சாலையிலும் மல்லியங்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி காய்கறி சந்தை நடைபெற்று வருகிறது. 2022-23ஆம் ஆண்டு சுங்கம் வசூலிக்கும் உரிமை வழங்கப்பட்ட குத்தகைதாரர் சுங்கம் வசூலிக்கப்படும்பொழுது மல்லியங்குப்பம் ஊராட்சி பகுதியில் நடைபெறும் கடைகளுக்கு சுங்கம் வசூலிக்க இயலவில்லை என தெரியப்படுத்தியதை தொடர்ந்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று மல்லியங்குப்பம் ஊராட்சியினை ஆரணி பேரூராட்சியுடன் இணைப்பதற்கு அரசாணை (நிலை) எண். 205, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரு.2) துறை நாள் 31.12.2024ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தினசரி சந்தை நடைபெறுவதற்கான மதிப்பீடு தயாரித்து அரசுக்கு அனுப்பப்படவுள்ளது.

(3) பேரூராட்சியில் தெருவிளக்கு, குடிநீர் பராமரிப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கான பட்டியல் தொகைகளுக்கான வருமான வரி மற்றும் சேவை வரி ஆகியவை 2023-2024ஆம் ஆண்டுக்கு ரூ.1,76,504ம் 2024-25ஆம் ஆண்டுக்கு ரூ.9,55,934ம் மற்றும் 2025-2026 ஆண்டுக்கு ரூ.18,49,163மும் ஆக மொத்தத் தொகை ரூ.29,81,601 வங்கி மூலம் 30.03.2026ல் செலுத்தப்பட்டுள்ளது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) இப்பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. க.கோ. யுவராஜ் மற்றும் பதிவறை எழுத்தர் திரு. என். பாலாஜி என்பவர்களுக்கு மாற்றுப் பணியில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோதிலும், இப்பேரூராட்சியில் சொத்துவரி வசூல் பணிகளை மேற்கொண்டு 100 சதவீதம் வசூலிக்கப்பட்டதால் அவருடைய வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத் தொகை ECS மூலம் செலுத்தப்பட்டது. இதில் விதிமீறலோ மற்றும் முறைகேடோ நடைபெறவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. P.S. முனுசாமி என்பவர் தனது முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலத்தில் -

(i) ஆரணி முதல்நிலை பேரூராட்சியில் சொத்துவரியானது எவ்வித நிலுவையின்றி செய்யப்பட்டு அதற்கான ஊக்கத்தொகையானது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் மாற்று பணியாளர் திரு. பாலாஜி என்பவரின் பெயரில் பெற்று, அதை பேரூராட்சி செயல் அலுவலரால் கையாடல் செய்யப்பட்டுள்ளது எனவும்,

(ii) 2024-25ஆம் ஆண்டில் பெருமாள் குப்பத்திலுள்ள தினசரி காய்கறி சந்தையை குத்தகைக்கு விடாமலும், பேரூராட்சி நிர்வாகத்தின்

மூலம் வசூல் செய்யப்படாமலும், தனிநபர் ஒருவரிடமிருந்து பேரூராட்சி மன்ற தலைவரின் கணவர் கையூட்டு பெற்றதன் மூலம் பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும்,

(iii) பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணம் பட்டுவாடா இனங்களில் சேவை வரி, வருமான வரி பிடித்தம் செய்வதில்லை என்பதால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது எனவும்,

(iv) பஜார் தெருவில் அமைந்துள்ள காய்கறி வணிகக் கட்டடத்தை இடிப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல் தனி நபருக்கு கட்டடம் இடிக்கும் பணி அளிக்கப்பட்டதன் மூலம் விதிமீறி முறைகேடுகள் நடைபெற்றுள்ளன எனவும் புகாராகத் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள புகார்களுக்கு ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளதை அறிய முடிகிறது.

(i) 2024-25ஆம் ஆண்டுக்கு பேரூராட்சியின் வசூல் பணிகளை மேற்கொள்ளும் வரி தண்டலர் பணியாளர்கள் ஆரணி முதல்நிலை பேரூராட்சியில் இல்லாத நிலையில், இப்பேரூராட்சியில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் திரு. க.கோ. யுவராஜ் என்பவரும் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மாற்றுப் பணியில் பணிபுரிந்து வரும் பதிவறை எழுத்தர் திரு. என். பாலாஜி என்பவரும் தங்களது வழக்கமான பணிகளுடன், கூடுதலாக 2024-25ஆம் ஆண்டிற்கான சொத்துவரி முழுவதும் வசூல் செய்ததன் காரணமாக அரசாணை எண். 504, ஊரக வளர்ச்சி துறை நாள் 24.06.1987ல் வெளிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் மேற்காணும் 2 பணியாளர்களுக்கும் 1 மாத ஊதியம் ஊக்கத் தொகை அவர்களுடைய வங்கிக் கணக்கில் ECS மூலம் செலுத்தப்பட்ட நிலையில், இதில் எவ்வித விதிமீறலும், முறைகேடும் நடைபெறவில்லை.

(ii) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பி.பி. மாநில நெடுஞ்சாலையில் உள்ள தினசரி காய்கறி சந்தை பகுதியானது மல்லியங்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியும் அடங்கியது ஆகும். இதனால் மல்லியங்குப்பம் ஊராட்சி பகுதியில் நடைபெறும் கடைகளுக்கு சுங்கம் வசூலிக்க இயலவில்லை என குத்தகைதாரர் தெரியப்படுத்ததை தொடர்ந்து, மல்லியங்குப்பம் ஊராட்சியினை ஆரணி முதல்நிலை பேரூராட்சியுடன் இணைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பகுதியில் தினசரி சந்தை நடைபெறுவதற்கான மதிப்பீடு செய்து அரசின் ஒப்புதல் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iii) பேரூராட்சியில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கான பட்டியல் தொகைகளுக்கான சேவை வரி மற்றும் வருமான வரி ஆகியவை 2023-24ஆம் ஆண்டு முதல் 2025-26ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ.29,81,601 தொகை வங்கி மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

(iv) 2024-25ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பஜார் தெருவில் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் புதிய நாளங்கடி காய்கறி, இறைச்சி கடைகள் கட்டும் பணி மேற்கொள்வதற்காக, ஏற்கனவே அவ்விடத்தில்

இருந்த பழைய கட்டடத்தை இடிக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, உரிய ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, கட்டட இடிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது புதிய கட்டடம் 04.03.2026 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

மேற்காணும் வரிசை எண்கள் (i) முதல் (iv) வரை ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கும் பணிகளில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1. திரு. P.S. முனுசாமி,
   8வது வார்டு உறுப்பினர், எண். 36, பின்ஜலார் தெரு,
   ஆரணி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 601 101.
2. செயல் அலுவலர்,
   ஆரணி முதல்நிலை பேரூராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.
3. இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை,
   571, அண்ணாசாலை நந்தனம், சென்னை-35.
4. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர். ~~இகோ~~/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/5/26

செயலாளர்

20/5/26.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032